1969 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், 415, 416, 417 ஆகிய மூன்றையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்

சித்த வைத்திய முறை.

*415 வினா : **திரு. வை சுவாமிநாதன் :**
புலவர். பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவைத் தொடங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டில் தொடங்குவதாக உத்தேசிக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) உண்டு.

(இ) இந்த ஆண்டிலேயே திருச்சிராப்பள்ளியில் தொடங்கியாயிற்று 1969–70 ஆண்டில் மேலும் ஐந்து மாவட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

*416 வினா : **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

சித்த வைத்தியத்தின் சிறப்பினை மக்கள் உணரும்பொருட்டு விளம்பர அதிகாரிகளை நியமிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

*417—*Q.* THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state —

(*a*) whether the Government have opened a sidha dispensary in the premises of the Tamil Nadu Secretariat, and

(*b*) if so, the purpose that would be served ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) சித்த வைத்திய முறைப்படி சிகிச்சைபெற விரும்புபவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துதருவதற்காக.

புலவர். பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மஞ்சட்காமாலை, க்ஷயரோகம், குஷ்டம், புற்று போன்ற கடுமையான நோய்களைச் சித்த வைத்திய முறைகளின்மூலம் போக்க முடியும் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவ்வாறாயின் அம்மருத்துவப் பயிற்சி பெற்ற ஒருவரை அந்த முறைகளுக்குத் தனி நெறியாளராக அமைத்துத் தனி ஆய்வுக்கூடம் ஒன்றைத் தமிழகத்தில் உருவாக்கிச் செம்மையுடன் பேணிக்காக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சித்த மருத்துவத்தின் நல்ல சிறப்புக்களையெல்லாம் அறிந்துதான், அதனால் பல நோய்களுக்கு நல்ல சிகிச்சை அளிக்க முடியுமென்று நம்பிக்கையிருப்பதால்தான் அரசாங்கம் சித்த வைத்திய முறையை ஏற்றுக்கொண்டு, கல்லூரிகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது என்பதைக் கனம் உறுப்பினரவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவை யோசிக்கப்படும்.

திரு. பெ. மலேச்சாமி : தலைவரவர்களே, குடும்ப நலத்திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றச் சித்த வைத்திய முறையில் தெளிவாகச் செய்ய முடியுமென்று சிலர் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அது பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசு பரிசீலனை செய்யும்.

THIRU K. VINAYAKAM : Is the Siddha dispensary in the Secretariat building patronised by our employees? What is the attendance like ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த மருத்துவமனையில், தலைமைச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ மனையில் தினம் 130 பேர்கள் சிகிச்சை பெறுகிறார்கள். நாளுக்கு நாள் இந்தஎண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருவதால் இங்கு அனை வரும் அக்கறை காட்டுகிறார்கள், அவர்களுக்கு நம்பிக்கையிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

திரு. ஹாஜி. ம. மு. பீர் முஹமது : பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சித்த வைத்தியத்திற்காக 300-க்கும் மேற்பட்டவர்கள் வருகிறார்கள். சித்த வைத்தியத்தினால் பயன் அதிகமாயிருக்கிறது. சித்த வைத்தியத்தின்மீது மக்கள் மத்தியில் நம்பிக்கையிருக்கிறது. எனவே, இரண்டு மருத்துவர்கள் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் ஒருவரைச் சித்த வைத்திய யூனானி ஆயுர்வேதிக் பட்டம் பெற்றவர்களைப்போட அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போதும் இருக்கிறார்கள், ஆனால், மேலும் ஆயுர்வேத யூனானி மருத்துவத்திற்கு மாணவர்களே கிடைக்கவில்லை என்று நேற்றுக் கூட இந்த மானியத்தின் மீது நடந்த விவாதத்தின் போது குறிப்பிட்டேன். சித்த வைத்தியத்தை விரும்பிப் படிப்பதற்குமாணவர்கள் வருகிறார்கள். அதற்கான ஏற்பாடு களுக்குத்தான் பாளையங்கோட்டையிலேகூட வகை செய்யப்பட்டிருக்கிறது.

ஆஸ்டின்பட்டி காச நோய் மருத்துவ மனை.

418 * வினா : திரு. எஸ். அக்னிராஜு : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரையை அடுத்த ஆஸ்டின்பட்டி க்ஷயரோக ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிற்குண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) இத் திட்டம் இப்பொழுது மருத்துவக் கல்வி நெறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். அக்னிராஜு : தலைவரவர்களே, மதுரை தத்தனேரியில் உள்ள தொத்துநோய் வைத்தியசாலையை ஆஸ்டின்பட்டிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் இருந்தது, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.